தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253


நமது **தினகனி**
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 132 | 4 Pages | 10.12.2024 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 132 | 4 பக்கங்கள் | 10.12.2024 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி**
**விழிப்பது போலும் பிறப்பு**

**விளக்கம்:** இறப்பு எனப்படுவது ஒருவனுக்குஉறக்கம் வருதலைப் போன்றது, பிறப்பு எனப்படுவது உறக்கம் நீங்கி விழித்துக் கொள்வதைப் போன்றது.

## இந்தோனேசியா: ஜாவா தீவில் ஏற்பட்ட நிலச்சரிவு, திடீர் வெள்ளத்தில் சிக்கி 10 பேர் பலி



ஜகார்த்தா, டிச.10

இந்தோனேசியா நாட்டின் முக்கிய தீவான ஜாவாவில் கடந்த சில நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது. இதன்காரணமாக அங்கு நிலச்சரிவு மற்றும் திடீர் வெள்ளம் ஏற்பட்டது. இதில் சிக்கி இதுவரை 10 பேர் உயிரிழந்தனர் மற்றும் 2 பேர் காணவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேற்கு ஜாவா மாகாணத்தின் சுகாபூமி மாவட்டத்தில் கடந்த வாரம் பெய்த தொடர்மழையால், மலையோர குக்கிராமங்களில் மண், பாறைகள் மற்றும் மரங்கள் இடிந்து விழுந்ததால், 170க்கும் மேற்பட்ட கிராமங்களில் ஆறுகள் கரைபுரண்டு ஓடுகின்றன என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலச்சரிவு மற்றும் திடீர் வெள்ளம் 172 கிராமங்களை அழித்தது மற்றும் 3,000க்கும் மேற்பட்ட மக்கள் தற்காலிக அரசாங்க முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் 31 பாலங்கள், 81 சாலைகள் மற்றும் 539 ஹெக்டேர் நெல் வயல்களை அழித்தன. பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களை மீட்கும் பணியில் மீட்புக்குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த மாதம், இந்தோனேசியாவின் வடக்கு சுமத்ரா மாகாணத்தில் பெய்த கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் திடீர் வெள்ளத்தில் சிக்கி 27 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிரியாவில் உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் முகாம்களை குறிவைத்து அமெரிக்கா தாக்குதல்



டமாஸ்கஸ், டிச.10

மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றான சிரியா கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டிற்குள் சென்றுள்ளது. 24 ஆண்டுகளாக அதிபராக இருந்த அல் அசாத் நாட்டை விட்டு தப்பி ஓடியுள்ளார். அவர் ரஷியாவில் தஞ்சம் அடைந்து இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

'ஹயாத் தஹ்ரிர் அல்ஷாம்' கிளர்ச்சியாளர்கள் வசம் தற்போது சிரியா சென்றுள்ள நிலையில், சிரியா பிரதமர் முகமது காசி ஜலாலி வெளியிட்ட வீடியோ பதிவில், எதிர்க்கட்சிகளுடன் கைகோர்க்கவும், ஒரு இடைக்கால அரசை நிறுவவும் தான் தயாராக இருப்பதாக தெரிவித்தார். மேலும் அவர், கிளர்ச்சி குழுவின் தலைவர்களை தொடர்பு கொண்டதாகவும், அடக்குமுறைகள் இருக்காது என்று கிளர்ச்சியாளர்கள் உறுதி அளித்ததாகவும் கூறினார்.

சிரியா கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் சென்ற நிலையில், அங்குள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத முகாம்களை குறிவைத்து அமெரிக்கா வான்வழி தாக்குதல் நடத்தியுள்ளது. அமெரிக்காவின் பி 52, எப் 15 எஸ், ஏ10 எஸ் ஆகிய போர் விமானங்கள் மத்திய சிரியாவில் உள்ள பயங்கரவாத முகாம்களை குறிவைத்து தாக்குதல் நடத்தியதாக அமெரிக்க ராணுவ அதிகாரி கூறியுள்ளார்.

## சிரியா நெருக்கடி: ரஷியாவில் தஞ்சம் புகுந்த ஆசாத்...?



மாஸ்கோ, டிச.10

சிரியா நாட்டில் அதிபர் பஷார் அல்ஆசாத் தலைமையிலான அரசு இரு தசாப்தங்களாக நடந்து வந்த சூழலில், அரசுக்கு எதிரான கிளர்ச்சியாளர்களின் போராட்டம் கடந்த வாரம் தீவிரமடைந்தது. கிளர்ச்சியாளர்கள், சிரியாவின் அலெப்போ மற்றும் ஹமா பகுதிகளை கைப்பற்றியதுடன் தொடர்ந்து, ஹோம்ஸ் நகர் நோக்கி முன்னேறினர். இதனால், ஆயிரக்கணக்கான மக்கள் அப்பகுதியில் இருந்து தப்பியோடினர்.

இந்த சூழலில் டமாஸ்கஸ் நகரையும் கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றினர். இதனால், பாதுகாப்பு தேடி அதிபர் ஆசாத் டமாஸ்கஸில் இருந்து வெளியேறி விட்டார் என தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், ஆசாத் என்ன ஆனார் என்ற விவரம் சரிவர வெளியிடப்படாமல் இருந்தது.

சிரியாவில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டு உள்ள நிலையில், அந்நாட்டில் இருந்து தப்பியோடிய ஆசாத் மற்றும் அவருடைய குடும்பத்தினர் ரஷியாவில் தஞ்சம் புகுந்துள்ளனர் என கிரெம்ளின் மாளிகை வட்டாரம் தெரிவிக்கின்றது.

இதுபற்றி ரஷிய செய்தி நிறுவனம் வெளியிட்ட செய்தியில், ஆசாத் மற்றும் அவருடைய குடும்பத்தினர் மாஸ்கோ நகருக்கு வந்துள்ளனர். ரஷியா மனிதாபிமான அடிப்படையில் அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்துள்ளது. சிரியாவில் ஏற்பட்டு உள்ள நெருக்கடிக்கு அரசியல் ரீதியாக தீர்வு காண வேண்டும் என எப்போதும் ரஷியா கூறி வருகிறது.

ஐ.நா. மத்தியஸ்தம் செய்யும் பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்கப்பட வேண்டும் என நாங்கள் வலியுறுத்துகிறோம் என ரஷிய அரசின் நெருங்கிய வட்டாரம் தெரிவிக்கிறது என்று அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# சட்டமன்ற நாயகர் கலைஞர் நூற்றாண்டு சிறப்பு மலரை வெளியிட்டார் மு.க.ஸ்டாலின்



சென்னை, டிச.10

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

ஐந்து முறை தமிழ்நாட்டின் முதல்அமைச்சராக இருந்தவரும், 13 முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு 13 முறையும் வெற்றி பெற்றவரும், தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழ்நாட்டின் அரசியல் தலைவராக மட்டுமல்லாமல் இந்திய அரசியலின் திசையை தீர்மானிப்பவராகவும் திகழ்ந்த நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞரின் பன்முக ஆற்றலையும், அவர் படைத்தளித்த மக்கள் நலத்திட்டங்களையும், சமுதாயத்தில் அதன் தாக்கத்தையும் வருங்காலங்களில் தமிழ்நாட்டு மக்கள் என்றென்றும் நினைவில் கொள்ளும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா மாநிலம் முழுவதும் தமிழ்நாடு அரசால் சிறப்பாக கொண்டாட முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் 22.05.2023 அன்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தைத் தொடர்ந்து, அமைச்சர்கள் மற்றும் சபாநாயகர் அப்பாவு தலைமையில் 12 சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, நூற்றாண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இச்சிறப்பு குழுக்களில், சபாநாயகர் அப்பாவுவை தலைவராகக் கொண்ட "சட்டமன்ற நாயகர்கலைஞர்" குழுவால், "நூற்றாண்டு விழா நாயகர் கலைஞர் சட்டமன்றத்தின் மூலம் சமூக முன்னேற்றத்திற்கு ஆற்றிய சாதனைகளில் மாணவர்களை ஈர்த்தது" என்ற தலைப்பில் சென்னையில் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. மேலும், தமிழ்நாடு முழுவதும் 120 கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில் துணைக் குழுக்கள் மூலம் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

இக்கருத்தரங்குகளில் சுமார் 600 மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர். தொடர்ந்து கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான மாநில அளவிலான கருத்தரங்கு சென்னை, மாநிலக் கல்லூரியில் 27.2.2024 அன்று நடைபெற்றது. அதில் 54 மாணவ, மாணவியர்கள் பங்கேற்று தங்களது கருத்துகளை எடுத்துரைத்தனர். மேலும், சென்னை, ரோசரி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான மாநில அளவிலான கருத்தரங்கு 29.8.2024 அன்று நடைபெற்றது. அதில், 53 மாணவ, மாணவியர்கள் பங்கேற்று தங்களது கருத்துகளை எடுத்துரைத்தனர். முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவின் நிறைவாக, சபாநாயகர் அப்பாவுவை தலைவராகக் கொண்ட குழுவால் தயாரிக்கப்பட்ட "சட்டமன்ற நாயகர்கலைஞர்" நூற்றாண்டு விழா சிறப்பு மலரை சென்னை தலைமைச்செயலகத்தில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட, அதனை நீர்வளத்துறை அமைச்சரும், சட்டசபை முன்னவருமான துரைமுருகன் பெற்றுக்கொண்டார்.

இந்த சிறப்பு மலரில் சட்டமன்றத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆற்றிய முக்கிய உரைகள், சட்டமன்ற மேலவையில் ஆற்றிய முக்கிய உரைகள், முத்தமிழறிஞர் கலைஞர் முதல்அமைச்சராக இருந்தபோது முன்மொழிந்து நிறைவேற்றப்பட்ட முக்கிய அரசினர் தனித் தீர்மானங்கள், சட்டப் பேரவையில் கலைஞர் பொன் விழா முக்கிய உரைகள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிறப்பினை போற்றிடும் தலைவர்கள், முன்னாள் இந்நாள் அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற முன்னாள் இந்நாள் உறுப்பினர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், ஆன்மீகத் தலைவர்கள் போன்றவர்களின் வாழ்த்துச் செய்திகள், கட்டுரைகள் போன்றவை இடம் பெற்றுள்ளன.

அதனைத் தொடர்ந்து, "நூற்றாண்டு விழா நாயகர் கலைஞர் சட்டமன்றத்தின் மூலம் சமூக முன்னேற்றத்திற்கு ஆற்றிய சாதனைகளில் மாணவர்களை ஈர்த்தது" என்ற தலைப்பில் மாநில அளவில் நடைபெற்ற கருத்தரங்கில் முத்தமிழறிஞர் கலைஞர் குறித்து சிறப்பான கருத்துகளை எடுத்துரைத்ததற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட திருநெல்வேலியைச் சேர்ந்த எஸ். ரகுமாள்(முதலிடம்), திருப்பத்தூரைச் சேர்ந்த மா.மகேஷ் (இரண்டாமிடம்) மற்றும் சென்னையைச் சேர்ந்த நா.அழகேசன் (மூன்றாமிடம்) ஆகிய மூன்று கல்லூரி மாணவ, மாணவிகள், திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த இ.முகம்மது ஹாரிஸ் (முதலிடம்), விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த கே. கவிலன் (இரண்டாமிடம்) மற்றும் கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த பா. வர்ஷா (மூன்றாமிடம்) ஆகிய மூன்று பள்ளி மாணவ, மாணவியர்கள் ஆகியோருக்கு முதல் பரிசாக1 லட்சம் ரூபாய், இரண்டாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாய், மூன்றாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாய் ஆகிய பரிசுத் தொகைக்கான வங்கி வரைவோலைகளையும் முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவச் சிலைகளையும் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு முதல்அமைச்சர் வழங்கி வாழ்த்து தெரிவித்தார். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பல பெண்களை ஏமாற்றிய காதல் மன்னன்.. செல்போனை பார்த்து அதிர்ச்சி அடைந்த புதுப்பெண்



சென்னை, டிச.10

கன்னியாகுமரி மாவட்டம் நெய்த மங்கலம் பகுதியைச் சேர்ந்த 27 வயதாகும் லிஜின் என்பவருக்கும் சென்னை புதுவண்ணாரப்பேட்டை பகுதியைச் சேர்ந்த 23 வயதான பெண் என்ஜினீயருக்கும் இருவீட்டு பெற்றோர் ஏற்பாட்டின் பேரில், உறவினர்கள் முன்னிலையில் கடந்த 2ந் தேதி சென்னை வண்ணாரப்பேட்டையில் திருமணம் நடந்தது. திருமணம் முடிந்த பின்னர் பெண் வீட்டாருக்கும், உறவினர்களுக்கும் லிஜின் மீது சந்தேகம் வந்தது. திருமண நேரத்தில் பெண் ஒருவர் சண்டை போட்டதால், அவர்கள் ரகசியமாக லிஜின் குறித்து விசாரிக்க தொடங்கினார்கள்.

இதன்படி லிஜினின் செல்போனை, அவரது புது மனைவியான பெண் என்ஜினீயர் ஆய்வு செய்தார்.

அதில் லிஜினுக்கு இன்ஸ்டாகிராம், முகநூல் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் பல பெண்களுடன்தொடர்பு இருப்பதும், அந்த பெண்களுடன் அவர் பேசிய உரையாடல் இருந்ததையும் கண்டு அதிர்ச்சி அடைந்தார். கடந்த 2019ம் ஆண்டு காரைக்காலை சேர்ந்த பெண்ணை காதலித்து, ஆசை வார்த்தை கூறி 6 மாதம் கர்ப்பம் ஆக்கி உள்ளார்.

இதுபற்றி இளம்பெண் கொடுத்தபுகாரின்பேரில் காரைக்கால் போலீசார் நடவடிக்கை எடுத்துள்ளனர். அப்போது அந்த பெண்ணுக்கு ரூ.5 லட்சம் கொடுத்து சமாதானம் பேசி முடித்துள்ளனர்.

அதேபோல் 2022ம் ஆண்டு தென்காசியை சேர்ந்த பெண்ணை காதலித்து ஏமாற்றி இருக்கிறார். இந்தநிலையில்தான் 2023ம் ஆண்டு கடலூரை சேர்ந்த இளம்பெண்ணை திருமணம் செய்து குடும்பம் நடத்தி ஏமாற்றியதும், இதனால் அவர் சென்னை வந்து திருமணத்தை தடுத்து நிறுத்த முயன்றதும் அந்த புதுப்பெண்ணுக்கு தெரிய வந்தது.

இதையடுத்து தங்களை நம்ப வைத்து ஏமாற்றி மகளை திருமணம் செய்து கொண்டதாக பெண் என்ஜினீயரின் பெற்றோர், வண்ணாரப்பேட்டை அனைத்து மகளிர் போலீசில் புகார் அளித்ததைத்தொடர்ந்து காதல் மன்னன் லிஜின் கைது செய்யப்பட்டார்.

# டங்ஸ்டன் விவகாரத்தில் முன்பே நடவடிக்கை எடுக்க தமிழக அரசு தவறிவிட்டது: எடப்பாடி பழனிசாமி



சென்னை, டிச.10

தமிழ்நாடு சட்டசபை கூட்டம் கூட்டம் இன்று தொடங்கியது. இதில் மதுரை மாவட்டத்தில் இந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட டங்ஸ்டன் சுரங்க உரிமையை உடனடியாக ரத்து செய்திடவும், சம்பந்தப்பட்ட மாநில அரசின் அனுமதியின்றி சுரங்க உரிம ஏலங்களை மேற்கொள்ளக்கூடாது என்றும் மத்திய அரசை வலியுறுத்தி தனித் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

இதன்படி மாநில அரசுகளின் அனுமதியின்றி எந்த சுரங்க அனுமதியையும் வழங்கக்கூடாது என்றும், சுரங்கத்திற்கு தேர்வான பகுதி ஏற்கனவே பல்லுயிர் பெருக்கத் தலமாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய அரசுக்கு வலியுறுத்தப்படுவதாக சட்டசபையில் தீர்மானத்தினை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் முன் மொழிந்தார். சட்டமன்றத்தில் டங்ஸ்டன் சுரங்கத்துக்கு எதிரான தனித் தீர்மானம் மீது எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி கேள்வி எழுப்பினார். அவர் கேட்ட கேள்விக்கு அவை முன்னவர் துரை முருகன் பதிலளித்து பேசினார். இதனால் சட்டசபையில் காரசார விவாதம் நடைபெற்றது.

"மக்கள் போராட்டத்திற்கு பிறகு வேறு வழியின்றி பிரதமருக்கு முதல்அமைச்சர் கடிதம் எழுதியுள்ளார். ஆரம்பக் காலத்திலேயே ஒப்பந்தபுள்ளி கோரும் போதே, இந்த விவரத்தை மத்திய அரசுக்கு தெரிவித்து இருந்தால், ஏலத்தை தடுத்து இருக்கலாம்" என்று எடப்பாடி பழனிசாமி கூறினார். இதையடுத்து நான் முதல்அமைச்சராக இருக்கிற வரை நிச்சயமாக மத்திய அரசு இந்தத் திட்டத்தை கொண்டுவர முடியாது. கொண்டு வந்தாலும்தடுத்தேதீருவோம் என்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

பின்னர் மதுரையில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்கும் மத்திய அரசின் முயற்சிக்கு எதிராக சட்டசபையில் கொண்டுவரப்பட்ட தனித்தீர்மானம்,பரபரப்பானவிவாதங்களுக்குப் பிறகு அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. இந்த நிலையில் சட்டமன்றத்திற்கு வெளியே செய்தியாளர்களைச் சந்தித்த எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி கூறியதாவது:

டங்ஸ்டன் சுரங்கத்துக்கான ஒப்பந்தத்தை அறிவித்தது முதல் இறுதி செய்தவரை தமிழக அரசு அமைதி காத்தது. டங்ஸ்டன் சுரங்கம் விவகாரத்தில் முன்பே நடவடிக்கை எடுக்க தமிழக அரசு தவறிவிட்டது. கடித பரிமாற்றம் தொடர்பான விவரங்களை தமிழக அரசு இப்போதுதான் தெரிவிக்கிறது. தங்கள் தவறு தெரியவந்ததும் தமிழக அரசு பூசி மொழுகி, மறைக்கப் பார்க்கிறது. மத்திய அரசுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்திருந்தால் இந்தப் பிரச்சினையே வந்திருக்காது. இவ்வாறு அவர் கூறினார்.

# லாட்டரி டிக்கெட்டுக்கும், பிளாக் டிக்கெட்டுக்கும் போட்டி: அமைச்சர் தா.மோ.அன்பரசன் பேச்சு



சென்னை, டிச.10

சென்னையை அடுத்த தாம்பரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக்கூட்டம் ஒன்றில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் பங்கேற்றார். அப்போது அவர் பேசியதாவது:

அரசியலில் புதிது புதிதாக பலரும் வருவார்கள். அதற்கு எல்லாம் பயப்படவே கூடாது.

நாம் எவ்வளவு பேரை பார்த்துள்ளோம். அதெல்லாம் காலப்போக்கில் சரியாகிவிடும். நாம் அதற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டியது இல்லை.

இப்போது நிலைமை என்ன என்றால் லாட்டரி சீட்டுக்கும், பிளாக் டிக்கெட்டுக்கும் போட்டி நடக்கிறது. அது சில பேருக்கு புரியும், சில பேருக்கு புரியாது.

தமிழகத்தில் எப்படியாவது லாட்டரி சீட்டை கொண்டுவர வேண்டும் என துடிக்கின்றனர். தமிழகத்தில் மட்டும் அது வேகாது.

2026ல் தி.மு.க. வராது என சொல்கிறார்கள். தி.மு.க.காரர்கள் கங்கணம் கட்டிக்கொண்டு இறங்கிவிட்டான் என்றால் வேலையை முடிக்காமல் வரமாட்டார்கள்.

இப்போது பெற்றுள்ள வெற்றியைவிட அதிக வெற்றி பெற்று மீண்டும் ஸ்டாலின்முதல்வராவார். அதை செய்யாமல் விட மாட்டோம்.

புயல், மழை, வெள்ளம், கொரோனா என எதுவாக இருந்தாலும் மக்களுக்காக உழைப்பதுதான் அரசியல் கட்சிகளின் முக்கிய கடமை. அதை எல்லா காலத்திலும் சரியாக செய்யும் ஒரே கட்சி தி.மு.க. மட்டும் தான்.

தி.மு.க, திராவிட மாடல் என்றால் வயிறு எரிகிறது என்கிறார்கள். நம்மை எப்படியாவது ஒழித்துவிட வேண்டும் என நினைக்கிறார்கள். எனவே கட்சி நிர்வாகிகள் எச்சரிக்கையாக, பொறுப்பாக, கடுமையாக வேலை செய்ய வேண்டும் என தெரிவித்தார்.

# செய்யாற்றில் 5வது நாளாக பெருக்கெடுத்து ஓடும் வெள்ளம்



திருவண்ணாமலை, டிச.10

திருவண்ணாமலை மாவட்டத்தில் பெய்த பலத்த மழையால், ஜவ்வாது மலையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக செய்யாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் காஞ்சிபுரம் மாவட்டம் வெங்கச்சேரி மாகரல் இடையே செல்லும் தங்கச்சேரி தடுப்பணையில் 5வது நாளாக 9 ஆயிரம் கன அடி தண்ணீர் ஓடுகிறது.

அப்பகுதியில் உள்ள விவசாயிகள் 10 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் செய்துள்ள நிலையில் ஆற்றில் தண்ணீர் வருவதால் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி கோவிலில் குவிந்த ஏராளமான பக்தர்கள்



திருச்செந்தூர், டிச.10

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் சிறந்த பரிகார தலமாக விளங்கி வருகிறது. நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் திருச்செந்தூர் சுப்பிரமணியசாமி கோவிலுக்கு வந்து கடல் மற்றும் நாழிக்கிணறு புனித தீர்த்தத்தில் நீராடி சாமி தரிசனம் செய்து செல்கின்றனர்.

ஞாயிறு விடுமுறை தினம் என்பதாலும், கார்த்திகை மாதம் என்பதாலும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் மற்றும் ஐயப்ப பக்தர்கள் காலையில் இருந்தே சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு வந்து கடல் மற்றும் நாழிக்கிணறு புனித தீர்த்தத்தில் நீராடி நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.சபரிமலை ஐயப்பன் கோவிலுக்கு செல்லக்கூடிய பக்தர்கள் ஏராளமானோர் இங்கு வந்து சாமி தரிசனம் செய்து வருவதால் கோவில் கடற்கரை, கோவில் வளாகத்தில் ஏராளமான பக்தர்கள் கூட்டம் கூட்டமாக காணப்படுகிறது. இன்று கோவில் நடை அதிகாலை 4 மணிக்கு திறக்கப்பட்டது. 4.30 விஸ்வரூபம் 6 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம், தொடர்ந்து மற்ற கால பூஜைகள் நடக்கிறது.

# மின்கட்டணம் செலுத்தவில்லை என ஏமாற்றி லிங்க் அனுப்பி ரூ.4½ லட்சம் சுருட்டல்

சென்னை, டிச.10

ஆன்லைன் மூலமாக ஏதாவது ஒரு வழியில் பணம் பறிக்கப்படும் சம்பவங்கள் சென்னையில் தினந்தோறும் அரங்கேறி கொண்டே இருக்கிறது.

அந்த வரிசையில் மின் கட்டணம் செலுத்தவில்லை என்று ஏமாற்றி லிங்க் அனுப்பி பணத்தை சுருட்டும் சம்பவங்களும் அவ்வப்போது நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. இதுபோன்ற மோசடி மூலமாக ரூ.4½ லட்சம் பணம் பறிக்கப்பட்டு உள்ளது.

சென்னை கோட்டூர் கார்டன் பகுதியை சேர்ந்தவர் ராஜசேகரன். இவரது செல்போன் எண்ணுக்கு லிங்க் ஒன்று வந்துள்ளது. அதில் நீங்கள் மின் கட்டணம் செலுத்தாமல் இருக்கிறீர்கள். அதனால் உங்களது வீட்டில் மின்சாரம் துண்டிக்கப்பட வாய்ப்புள்ளது.

அதனை தவிர்க்க லிங்கில் சென்று மின் கட்டணத்தை செலுத்தலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இதை நம்பி ராஜசேகரன் லிங்கில் சென்று பார்த்துள்ளார். அடுத்த சில நிமிடங்களிலேயே ராஜசேகரின்வங்கிக்கணக்கில் இருந்து ரூ.4 லட்சத்து 60 ஆயிரம் பணம் எடுக்கப்பட்டது. இதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்த ராஜசேகரன் போலீசில் புகார் செய்தார்.

இதுபற்றி சைபர் கிரைம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# சைபர் அடிமைகளாக மாற்றும் கும்பலின் முக்கிய குற்றவாளி கொல்கத்தாவில் கைது



சென்னை, டிச.10

தமிழகத்தில் இருந்து வெளிநாடுகளுக்கு வேலைக்கு செல்பவர்களை சைபர் அடிமைகளாக மாற்றும் சம்பவங்களை தடுப்பதற்கு போலீசார் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். சென்னையை சேர்ந்த அப்துல்காதர், சையது ஆகியோரது மூலமாக மேற்கு வங்காளத்தை சேர்ந்த சங்கர் சர்கார் என்பவர் 9 பேரை லாவோஸ் நாட்டுக்கு வேலைக்கு அனுப்பிவைத்துள்ளார். இது போன்று வேலைக்கு சேர்ந்தவர்கள் அங்கு சைபர் அடிமைகளாக மாற்றப்பட்டு தவித்து வருவதாக எழுந்த புகாரின் பேரில் சேலம் தம்மம்பட்டி போலீஸ் நிலையத்தில் கடந்த ஜூலை மாதம் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு விசாரணை சி.பி.சி.ஐ.டி.க்கு மாற்றப்பட்டு விசாரணை நடைபெற்று வந்தது. இந்த வழக்கில் அப்துல் காதர், சையது ஆகியோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.இந்த வழக்கின் முக்கிய குற்றவாளியானசங்கர் சர்காரைபிடிக்க போலீசார் வலை விரித்தனர்.இது தொடர்பாக விமான நிலையங்கள் உஷார்படுத்தப்பட்டு லுக் அவுட் நோட்டீசும் அனுப்பப்பட்டிருந்தது. இந்த நிலையில் கொல்கத்தா விமான நிலையத்தில் வைத்து சங்கர் சர்கார் கைது செய்யப்பட்டார்.அவரை போலீசார் அங்குள்ள கோர்ட்டில் ஆஜர்படுத்தி அழைத்து வந்து சேலம் கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.இவரது பின்னணியில் உள்ள சீனமோசடிக்கும்பலைபிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

# 'கூகுள் பே' மூலம் சிறிய தொகையை அனுப்பி வங்கி பணத்தை மொத்தமாக சுருட்டும் மோசடி கும்பல்

சென்னை, டிச. 10

இணைய தள மோசடிகள் நாடு முழுவதும் இன்று அதிகரித்துக் கொண்டே செல்கிறது. உங்கள் பெயரில் போதைப்பொருள் பார்சல் அனுப்பப்பட்டு உள்ளது. நீங்கள் டிஜிட்டல் முறையில் கைது செய்யப்பட்டுள்ளீர்கள் என்பதில் தொடங்கி பல்வேறு வழிகளில் மோசடி பேர் வழிகள் இருந்த இடத்தில் இருந்து நமது வங்கி பணத்தை மொத்தமாக சுருட்டிக் கொண்டு இருக்கிறார்கள்.

அந்த வகையில் 'கூகுள் பே' மூலமாக சிறிய தொகையை அனுப்பி உங்களது பின் நம்பரை தெரிந்து கொண்டு வங்கிக் கணக்கில் உள்ள மொத்த பணத்தையும் சுருட்டும் நூதன மோசடி தற்போது அரங்கேறி வருகிறது. குறிப்பிட்ட வங்கிக் கணக்குக்கு ரூ.5 ஆயிரம் பணத்தை மோசடி ஆசாமிகள் எங்கிருந்தோ உங்களுக்கு அனுப்புவார்கள்.

அறிமுகம் இல்லாத நபரிடம் இருந்து இந்த பணம் வந்த சில நிமிடங்களிலேயே உங்களைதொடர்புக்கொண்டு பேசும் நபர் எனது செல்போனில் இருந்து உங்களுக்கு தவறாக ரூ.5 ஆயிரம் பணத்தை அனுப்பிவிட்டேன். அதனை திருப்பி அனுப்பி விடுங்கள் என்று கூறுவார். நீங்களும் அதை நம்பி அடுத்தவர் பணம் நமக்கு எதற்கு? என நினைத்து யார் என்றே தெரியாத அந்த நபரது வங்கிக் கணக்குக்கு உங்களது யு.பி.ஐ. பின் நம்பரை பயன்படுத்தி ரூ. 5 ஆயிரத்தை திருப்பி அனுப்பி விட்டீர்கள் என்றால் அவ்வளவுதான்.

இதன் பிறகு உங்கள் வங்கிக் கணக்கில் உள்ள மொத்த பணமும் சுருட்டப் பட்டிருக்கும். எதிர்முனையில் இருக்கும் நபர் உங்களது யு.பி.ஐ. பின் நம்பரை அப்படியே ஹேக் செய்து வங்கிக் கணக்கில் உள்ள மொத்த பணத்தையும் எடுத்திருப்பார்.

இந்த மோசடியில் இருந்து தப்புவது எப்படி? என்பது பற்றி சைபர் கிரைம் போலீசார் விரிவாக விளக்கம் அளித்திருக்கிறார்கள்.

அதன்விவரம்வருமாறு:

உங்களுக்கு சிறிய தொகையை தெரியாமல் அனுப்பி இருப்பவர் யார் என்றே தெரியாதவராக இருந்தால் நீங்கள் உடனடியாக அந்த பணத்தை திருப்பி அனுப்ப வேண்டியது இல்லை.

பணத்தை அவர் திருப்பி கேட்கும் பட்சத்தில் அதற்கு மாறாக உங்களது பின் நம்பரை மாற்றி போட்டு அவரை குழப்பம் அடைய செய்யலாம்.

இதுபோன்று தவறான பின் நம்பரை அடிப்பதன் மூலம் எதிர்முனையில் இருப்பவர்நீங்கள்அடித்திருப்பது உண்மையான பின் நம்பர் தான் என்று அவரும் உங்கள் வங்கிக் கணக்கில் இருந்து பணத்தை திருடுவதற்கு முயற்சிப்பார்.

ஆனால், அது நடக்காது. அவரது முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்து விடும். இணைப்பு துண்டிக்கப்பட்ட பிறகு நீங்கள் அடுத்தகட்ட நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு தொடர்பு கொண்டு இது போன்று அறிமுகம் இல்லாத நபரிடம் இருந்து பணம் வந்திருப்பதாக கூறி புகார் அளிக்க வேண்டும்.

அதன் பின்னர் அருகில் உள்ள போலீஸ் நிலையத்துக்கு நேரில் சென்று புகார் அளிக்கலாம். அதற்கு நேரமில்லை என்றால் 1930 என்ற எண்ணில் புகார் தெரிவிக்கலாம்.

இப்படி உஷாராக நீங்கள் செயல்படாமல் அவசரப்பட்டு உண்மையான பின் நம்பரை தெரிவித்து விட்டால் அடுத்த நொடியே உங்கள் வங்கிக் கணக்கில் உள்ள மொத்த பணமும் சுருட்டப்பட்டு விடும் என்பதை பொது மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு சைபர் கிரைம் போலீசார் தெரிவித்து உள்ளனர்.

# மின்சார வாரியத்தை தனியாருக்கு தாரைவார்க்க கூடாது ராமதாஸ் அறிக்கை



சென்னை, டிச.10

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளியில் 132 ஏக்கர் நிலப்பரப்பில் 765 கிலோ வோல்ட் திறன்கொண்ட துணை மின்நிலையம் அமைக்கப்படவுள்ளது. அங்கிருந்து அரியலூர் வரை மின்பாதைகள் அமைக்கப்பட உள்ளன. இந்தப் பணிகளை செய்து முடிக்க ரூ.4,500 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கும் நிலையில், இந்தத் திட்டத்தை தனியார் நிறுவனங்கள் மூலம் செயல்படுத்த தமிழக அரசு தீர்மானித்திருக்கிறது. கடந்த ஆட்சியிலேயேபலதுணை மின்நிலையங்களின் பராமரிப்புப் பணிகள் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், இப்போது ரூ.4500 கோடி மதிப்பில் புதிய துணை மின் நிலையமே அமைக்கப்பட்டால், அது படிப்படியாக மின்சார வாரியம் தனியார் மயமாகவே வழிவகுக்கும்.தமிழ்நாடு மின்வாரியம் ஏற்கனவே கடுமையான இழப்புகளை சந்தித்து வருகிறது. கடந்த 3 ஆண்டுகளில் ரூ.40 ஆயிரம் கோடி அளவுக்கு மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்ட பிறகும் கூட மின்சார வாரியம் தொடர்ந்து நஷ்டத்தில் தான் இயங்கிக் கொண்டிருக்கிறது.இத்தகைய சூழலில், மின்சாரத்தை கொண்டு செல்வதற்காகவும் தனியாருக்கு கட்டணம் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டால் தமிழ்நாடு மின்சார வாரியத்தை இலாபத்தில் இயக்குவது எப்படி சாத்தியமாகும்? மின்கட்டணத்தை மீண்டும் உயர்த்துவதற்கு மட்டும் தான் இது வழிவகுக்கும். எனவே, 765 கிலோ வோல்ட் துணை மின்நிலையம் அமைக்கும் திட்டத்தை தனியாரிடம் ஒப்படைக்கும் முடிவை அரசு கைவிட வேண்டும். அந்தத் திட்டத்தை மின்தொடரமைப்புக்கழகமே சொந்த முதலீட்டில் செயல்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# மீஞ்சூரில் வெள்ளம் வடியாததால் 250 குடும்பங்கள் தவிப்பு



பொன்னேரி, டிச.10

மீஞ்சூர் பேரூராட்சிக்குட்பட்ட 1வது வார்டு கலைஞர்நகர்முதல்தெரு, 2வது தெரு, ராஜேஸ்வரி நகர், பிரனாவநந்தா பள்ளி தெரு மற்றும் நாலூர் ஊராட்சிக்கு உள்பட்ட கேசவபுரம் பகுதிகளில் 250க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன.ஃபெஞ்ஜல் புயல் காரணமாக மழை பெய்த நிலையில் மழை நீர் வெளியேற முடியாமல் குடியிருப்பு பகுதியில் முழங்கால் அளவிற்கு சூழ்ந்துள்ளதால் அப்பகுதி குடியிருப்பு வாசிகள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர்.குடியிருப்பு பகுதிகளில் மழை நீருடன் கழிவு நீர் கலந்துள்ளதால் துர்நாற்றம் வீசி வருவதாகவும், தொற்று நோய் ஏற்படும் அபாயம் உள்ளதாகவும், இரவு நேரங்களில் அத்தியாவசிய பொருட்கள் கூட வாங்க செல்ல முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும், சாலைகள் முழுவதும் பழுதடைந்துள்ளதாகவும் பொதுமக்கள் கூறியுள்ளனர்.

# தொழில்நுட்ப கோளாறால் சென்னைமலேசியா விமானம் ரத்து

ஆலந்தூர், டிச.10

சென்னையில் இருந்து மலேசிய தலைநகர் கோலாலம்பூர் செல்லும் மலேசியன் ஏர்லைன்ஸ் பயணிகள் விமானம் நேற்று நள்ளிரவு 12.20 மணிக்கு, சென்னையில் இருந்து கோலாலம்பூர் புறப்பட தயாராகிக் கொண்டு இருந்தது.இதில் செலும் 148 பயணிகள், சென்னை சர்வதேச விமான நிலையத்திற்கு வந்து, அனைத்து சோதனைகளையும் முடித்துவிட்டு, விமானத்தில் ஏறுவதற்கு தயாராக இருந்தனர்.இந்த நிலையில் அந்த விமானத்தில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டது. நீண்ட நேரமாக முயற்சித்தும் தொழில்நுட்பக் கோளாறை சரி செய்ய முடியவில்லை. இதையடுத்து அந்த விமானம் ரத்து செய்யப்பட்டது.விமானத்தில் பயணிக்க வந்திருந்த 148 பயணிகளும், சென்னை நகரில் உள்ள பல்வேறு ஓட்டல்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். விமானம் தொழில்நுட்பக் கோளாறு சரி செய்யப்பட்டு இன்று இரவு, மலேசியாவுக்கு புறப்பட்டு செல்லும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# குட்கா விற்பனை செய்த இருவர் கைது



பொன்னேரி, டிச.10

ஆவடி போலீஸ் கமிஷனர் உத்தரவுபடி துணை கமிஷனர் ஆலோசனையின் பேரில் பொன்னேரி பழவேற்காடு சாலை திருப்பாலைவனம் பஜாரில் திருப்பாலைவனம் போலீஸ் இன்ஸ்பெக்டர் காளிராஜ் தலைமையில் போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டபோது இருசக்கர வாகனத்தை சோதனை செய்ததில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா பொருட்கள் இருப்பது தெரியவந்தது. பின்னர் பொன்னேரி தாயுமான் செட்டி தெருவை சேர்ந்த முசாமின் (50) என்பவரை கைது செய்து அவரிடம் இருந்து 65 கிலோ குட்காவை பறிமுதல் செய்து தீவிர விசாரணை செய்ததில் பொன்னேரி தாயுமாண் செட்டி தெருவில் மளிகைக் கடை நடத்தி வரும் பெருலால் (28) என்பவர் கடையில் பதுக்கி வைத்து அங்கிருந்து கிராமங்களில் உள்ள கடைகளுக்கு முசாமின் மூலம் இருசக்கர வாகனத்தில் விற்பனை செய்வது தெரிய வந்தது.பின்னர் இருவரையும் கைது செய்து கடையில் பதுக்கி வைத்த 65 கிலோ குட்கா, விற்பனைசெய்த65கிலோ குட்கா என மொத்தம் 130 கிலோவை திருப்பாலைவனம் போலீசார் பறிமுதல் செய்தனர். பின்னர் அவர்கள் இருவரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நாளை கேரளா பயணம் பினராயி விஜயனுடன் விழாவில் பங்கேற்கிறார்

சென்னை, டிச.10

கேரளமாநிலம் கோட்டயத்தில் உள்ள வைக்கத்தில் கோயில் நுழைவுப் போராட்டம் தொடங்கப்பட்டு 100 ஆண்டுகள் கடந்துள்ளது. தந்தை பெரியார்சமூகநீதி காக்க போராடிப் பெற்ற வெற்றியை நினைவுகூரும் வகையில், பெரியாருக்கு வைக்கத்தில் நினைவுச் சின்னம் அமைக்க உத்தரவிடப்பட்டு 1994ம் ஆண்டு நினைவிடம் திறந்து வைக்கப்பட்டது. இந்த நினைவிடத்தை புனரமைக்கும் பணிகளை மேற்கொள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டிருந்தார். இதை தொடர்ந்து அமைச்சர் எ.வ.வேலு வைக்கம் சென்று பெரியார் நினைவகத்தில் ஆய்வு மேற்கொண்டார். இதை தொடர்ந்து புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.இப்போது அங்கு பெரியாரின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும் புகைப்படங்கள் அடங்கிய நிரந்தர புகைப்பட கண்காட்சிக் கூடம், நூலகம், பார்வையாளர் மாடம், சிறுவர் பூங்கா உள்ளிட்டவை அமைந்துள்ளது. மேலும் அமர்ந்த நிலையில் பெரியார் சிலை நிறுவப்பட்டுள்ளது. இந்த கட்டிடங்களில் ஏற்பட்ட கரையான் அரிப்பு போன்றவற்றால் நினைவிடம் பழமையானதால் தமிழக அரசு சார்பில் ரூ.8.5 கோடியில் புனரமைக்கப்பட்டுள்ளது. இதை திறந்து வைக்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வருகிற 11ம் தேதி கேரளா செல்ல உள்ளார்.கேரள மாநிலம் கோட்டயத்தில் 12ந்தேதி தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழா நடைபெற உள்ளது. பெரியார் நினைவகம் மற்றும் பெரியார் நூலகம் திறப்பு விழாவுக்கு அம்மாநில முதல்மந்திரி பினராயி விஜயன் தலைமை தாங்குகிறார்.பெரியார் நினைவகம் மற்றும் நூலகத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து சிறப்புரையாற்றுகிறார்.

# தளவாடபொருட்கள் தடை: குமுளியில் முற்றுகை போராட்டம் நடத்த விவசாயிகள் முடிவு



கூடலூர், டிச.10

கேரள எல்லைப்பகுதியில் அமைந்துள்ள முல்லைப்பெரியாறு அணை மூலம் தமிழகத்தில் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் 14707 ஏக்கர் பரப்பளவில் இரு போக நெல் சாகுபடி நடைபெற்று வருகிறது. 152 அடி உயரம் கொண்ட அணையில் உச்சநீதிமன்ற உத்தரவின் பேரில் 142 அடி வரைதண்ணீர் தேக்கப்பட்டு வருகிறது. முல்லைப்பெரியாறு அணை கேரளாவில் இருந்தாலும் பராமரிப்பு பணி தமிழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. கடந்த 4ந் தேதி தமிழக நீர்வளத்துறையினர் 2 லாரிகளில் 4 யூனிட் எம்.சாண்ட் உள்ளிட்ட தளவாட பொருட்களை கொண்டு சென்றனர். வல்லக்கடவு சோதனைச்சாவடியில் கேரள வனத்துறையினர் லாரிகளை தடுத்து நிறுத்தி அணைப்பகுதிக்கு செல்ல அனுமதி மறுத்தனர். கடந்த 3 நாட்களாக பல்வேறு விவசாய சங்கங்கள் லோயர் கேம்பில் முற்றுகை போராட்டம், ஆர்ப்பாட்டம், பென்னிகுவிக் மணிமண்டபத்தில் உள்ளிருப்பு போராட்டம் ஆகியவற்றை நடத்தினர். ஆனால் கேரள அரசு இதனை கண்டுகொள்ளாமல் தொடர்ந்து லாரிகளை அனுமதிக்காததால் 4 நாட்களாக சோதனைச்சாவடியில் நிறுத்தப்பட்டுள்ளது. பல்வேறு போராட்டங்கள் நடத்தியும், கேரள அரசு நடவடிக்கை எடுக்காததால் விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர். லாரியின் டிரைவர்கள், நீர்வளத்துறை அதிகாரிகள் வல்லக்கடவு பகுதியில் தொடர்ந்து முகாமிட்டுள்ளனர். இது குறித்து விவசாயிகள் கூறுகையில், வழக்கமாக அணை பகுதியில் நடைபெறும் பராமரிப்பு பணிகளுக்காக செல்லும் தளவாட பொருட்களை இத்தனை நாட்கள் தடுத்து நிறுத்த வேண்டிய அவசியம் இல்லை. ஆய்வு செய்து ஓரிரு நாட்களில் அனுமதித்திருக்க வேண்டும். ஆனால் 4 நாட்களாக அனுமதி வழங்காதது வேதனையளிக்கிறது. எனவே இன்று மாலைக்குள் தளவாட பொருட்கள் கொண்டு சென்ற லாரிகளை அணை பகுதிக்குள் அனுமதிக்காவிட்டால் நாளை குமுளியில் முற்றுகை போராட்டம் நடத்த முடிவு செய்துள்ளோம் என்றனர்.

# ராகி தோட்டத்துக்குள் புகுந்து பயிர்களை சேதப்படுத்திய யானை கூட்டங்கள் நஷ்ட ஈடு வழங்க விவசாயிகள் கோரிக்கை



சத்தியமங்கலம், டிச.10

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் 10 வனச்சரகங்கள் உள்ளன. இவற்றில் தாளவாடி, ஆசனூர், கடம்பூர், திம்பம் வனப்பகுதியில் ஏராளமான யானைகள் வசித்து வருகின்றன.

அவ்வபோது யானை கள்வனப்பகுதியைவிட்டு வெளியேறி கிராமத்துக்குள் புகுந்து விவசாய நிலங்களில் பயிரிடப்பட்டுள்ளபயிர்களை சேதப்படுத்தி வருவது தொடர்கதை ஆகி வருகிறது. சத்தியமங்கலம் அடுத்துள்ள தாளவாடி மலை பகுதியில் உள்ள அருள்வாடி கிராமத்தை சேர்ந்தவர் சென்னப்பா. இவர் அவரது தோட்டத்தில் 4 ஏக்கர்ராகி பயிரிட்டு இருந்தார். இந்நிலையில் நள்ளிரவில் இவரது தோட்டத்தில் புகுந்த 10க்கும் மேற்பட்ட யானை கூட்டங்கள் அங்கு பயிரிடப்பட்டிருந்த ராகி பயிரை தின்றும் மிதித்தும் சேதப்படுத்தி உள்ளது.

சென்னப்பா இன்று காலை தோட்டத்தில் சென்று பார்த்த போது ராகி பயிரையானைகூட்டங்கள் சேதப்படுத்தி இருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார். அவர் தோட்டம் முழுக்க யானை சாணங்கள் அதிக அளவில் இருந்தன. இதுகுறித்து வனத்துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. வனத்துறையினர் சம்பவ இடத்திற்கு வந்து பார்வையிட்டனர். இது குறித்து வனத்துறையினர் கூறும் போது, கர்நாடக மாநிலத்திலிருந்து 40க்கும் மேற்பட்ட யானை கூட்டம் தாளவாடி அடுத்த அருள்வாடி கிராமத்தில் முகாமிட்டுள்ளன. இந்தயானை கூட்டங்கள் குழுக்களாக பிரிந்து ஒவ்வொரு மலை கிராமமாக சென்று பயிர்களை சேதப்படுத்தி வருகிறது. கடந்த 2 நாட்களுக்கு முன்பு தாளவாடி அருகே உள்ள கிராமத்தில் சம்பங்கிபூந்தோட்டத்திற்குள் புகுந்த 10க்கும் மேற்பட்ட யானைக் கூட்டங்கள் பூக்களை சேதப்படுத்தியது. அதே யானை கூட்டங்கள் தான் தற்போதும் தோட்டத்திற்குள் புகுந்து பயிர்களை சேதப்படுத்தி இருக்கலாம் என கருதுகிறோம். எனவே தாளவாடி மற்றும் அதன் சுற்றியுள்ள கிராம மக்கள் கவனத்துடன் செல்ல வேண்டும். குறிப்பாக வாகன ஓட்டிகள் மிகவும் கவனத்துடன் செல்ல வேண்டும்.

இருசக்கர வாகனத்தில் செல்பவர்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் வனப்பகுதியில் வாகனங்களை நிறுத்த வேண்டாம் என்றனர். இந்நிலையில் விவசாயி சென்னப்பன் மற்றும் விவசாயிகள் அரசு நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும் யானைகள் ஊருக்குள் புகாதவாறு பெரிய அகழி வெட்ட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மதுபான விற்பனைக்கு கட்டாயம் ரசீது வழங்க வேண்டும் டாஸ்மாக் நிர்வாகம் அறிவிப்பு



சென்னை, டிச.10

டாஸ்மாக் மதுக்கடைகள் தற்போது கணினி மயமாக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் சென்னை புறநகர் பகுதிகளான காஞ்சிபுரம் (வடக்கு), காஞ்சிபுரம் (தெற்கு) அரக்கோணம், ராமநாதபுரம், கரூர், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் உள்ள டாஸ்மாக் கடைகள் கணினி மயமாக்கப்பட்டு உள்ளதால் மது வாங்குபவர்களுக்கு ரசீது வழங்கப்பட்டு வருகிறது. இதில் கடை விற்பனையாளர்கள் உரிய வழிமுறைகளைபின்பற்றாமல் தவறான செயல்பாடுகளில் ஈடுபடுவதாக டாஸ்மாக் நிர்வாகத்துக்கு புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. இது குறித்து மாவட்ட மேலாளர்களுக்கு டாஸ்மாக் மேலாண்மை இயக்குனர் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது: மதுபான சில்லரை விற்பனை கடைகளில் விற்பனையின் போது, நுகர்வோர் விரும்பி கேட்கும் மதுபானங்களுக்கு அதற்கான ரசீதுகள் கண்டிப்பாக வழங்கப்பட வேண்டும். மதுபான சில்லரை விற்பனை கடைகளில் நுகர்வோர்களுக்கு மதுபானங்களை விற்பனை செய்யும் போது மட்டுமே பாட்டிலைஸ்கேன்செய்து விற்க வேண்டும். மதுபானங்களை முன்கூட்டியே ஸ்கேன் செய்து வைத்துக் கொண்டு விற்பனை செய்யக் கூடாது.

இதனால் விற்பனைக்கும் இருப்புக்கும் வித்தியாசம் ஏற்படுகிறது. இதை கடைக்காரர்கள் சரி செய்ய வேண்டும். தவறான செயல்பாடுகளை கண்காணிக்க தவறும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட மாவட்ட மேலாளர் மற்றும் உதவி மேலாளர் முழு பொறுப்பாவதோடு, துறை ரீதியான உரிய விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே ஒவ்வொரு டாஸ்மாக் கடைகளிலும் வாடிக்கையாளர் வாங்கும் சரக்குக்கு அவர் முன்னிலையில் ஸ்கேன் செய்து ரசீது வழங்க வேண்டும். இதை செயல்படுத்திட ஆக்கப்பூர்வமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஜெயில் கைதி தயாரித்த சோலார் மின்சார ஆட்டோ ஒருமுறை சார்ஜ் ஏற்றினால் 200 கி.மீ. வரை செல்ல முடியும்




கோவை, டிச.10

ஈரோடு மாவட்டம் கவுந்தப்பாடியை சேர்ந்தவர் யுகஆதித்தன் (வயது 32). ஏரோநாட்டிக்கல் என்ஜினீயர். இவர் ஒரு கொலை வழக்கில் கைதாகி கோவை மத்திய சிறையில் கடந்த 7 ஆண்டுகளாக ஆயுள் தண்டனை அனுபவித்து வருகிறார். மத்திய ஜெயில் தொழிற்கூடத்தில் பணியாற்றி வரும் யுகஆதித்தன் கையில் கிடைக்கும் சாதனங்களை கொண்டு பயன்பாடு உள்ள பொருட்களை உருவாக்குவதில் ஆர்வம் உடையவர். இவர் கடந்த சில மாதங்களுக்கு முன்பு சூரியஒளி மின்சக்தியால் இயங்கும் சைக்கிளை வடிவமைத்தார். இது சிறை அதிகாரிகள் மத்தியில் பாராட்டுதல்களை பெற்றது. இந்த நிலையில் யுகஆதித்தன் சூரிய ஒளி மின் சக்தியால் இயங்கும் சோலார் ஆட்டோவை வடிவமைத்து அனைவரையும் ஆச்சரியப்படுத்தி உள்ளார். கோவை மத்திய சிறையில் சமையற்கூடம் உள்ளிட்ட பகுதிகளில் பயன்படுத்தப்பட்டு வரும் இந்த ஆட்டோவை சோதனை பயன்பாடு முடிந்த பிறகு ஜெயில் கைதிகளை சந்திக்க வரும் உறவினர்களில் வயதானவர்கள் மற்றும் நடக்க முடியாதவர்கள் அமர்ந்து செல்லும் வகையில் நுழைவுவாயிலில் இருந்து பார்வையாளர் அறை வரை பயன்படுத்துவது என்று அதிகாரிகள் முடிவு செய்து உள்ளனர். இதுகுறித்து கோவை சரக சிறைத்துறை டி.ஐ.ஜி.சண்முகசுந்தரம் கூறியதாவது: ஜெயில் கைதி யுகஆதித்தன் உருவாக்கி உள்ள சோலார் ஆட்டோவின் மீது சூரிய ஒளி மின்உற்பத்திக்காக தகடு பொருத்தப்பட்டு உள்ளது. மேலும் இந்த ஆட்டோவில் டிரைவர் இருக்கைக்கு அடியில் பேட்டரி உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகள் பொருத்தப்பட்டு உள்ளன. சூரிய மின்சக்தி மூலம் இயங்கும் மேற்கண்ட ஆட்டோவில் ஒருமுறை பேட்டரி முழுவதுமாக நிரம்பினால் 200 கி.மீ. வரையிலும் தொடர்ச்சியாக பயன்படுத்த முடியும். இதில் டிரைவர் உள்பட 8 பேர் வரை அமர்ந்து பயணிக்கலாம். மேலும் எல்.இ.டி. விளக்கு, ஹாரன், ஹேண்ட் பிரேக், டேப்ரிக்கார்டர் போன்ற வசதிகளும் உள்ளன. ரூ.1.25 லட்சம் மதிப்பில் தயாரிக்கப்பட்டு உள்ள இந்த ஆட்டோ தற்போது சோதனை அடிப்படையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதுதவிர மேலும் 2 ஆட்டோக்கள் மற்றும் ஒரு ஆம்புலன்ஸ் வாகனம் தயாரிக்கவும் சிறைத்துறை திட்டமிட்டு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# விடுதியில் விஷம் குடித்து பெண் தற்கொலை கள்ளக்காதலனுக்கு வலை வீச்சு



கொடைக்கானல், டிச.10


மதுரை மேலக்கள்ளந்திரி பகுதியைச் சேர்ந்தவர் சசிகுமார். இவருக்கு திருமணமாகி ஒரு மகன் உள்ளார். இவருக்கும் அவரது உறவினர் மகாலெட்சுமி என்பவருக்கும் நீண்ட நாட்களாக பழக்கம் இருந்துள்ளது. இது நாளடைவில் கள்ளக்காதலாக மாறியது. இதனால் வெளிநாட்டில் வேலை பார்த்து வந்த சசிகுமார் மகாலெட்சுமி மீது கொண்ட காதல் மோகத்தால் நாடு திரும்பினார். இவர்கள் இருவரும் அடிக்கடி வீட்டுக்கு தெரியாமல் வெளியே சுற்றுலா சென்று வந்துள்ளனர். உறவினர்கள் இவர்களை சந்தேகப்படவில்லை.

இந்த நிலையில் மகாலெட்சுமி தனது கணவரிடம் நகை கடைக்கு செல்வதாக கூறிச் சென்றார். ஆனால் இரவு வெகு நேரமாகியும் வீடு திரும்பாததால் அதிர்ச்சியடைந்த அவர் மகாலெட்சுமியை தேடினார்.

இந்நிலையில் மகாலெட்சுமி தனது குடும்பத்தினரை செல்போன்மூலம் தொடர்பு கொண்டு கொடைக்கானலில் உள்ளேன் தான் மிகுந்த மன உளைச்சலில் இருப்பதாகவும், தற்கொலை செய்து கொள்ளப்போவதாகவும் தெரிவித்தார். இதனால் அதிர்ச்சியடைந்த குடும்பத்தினர் விரைந்து கொடைக்கானலுக்கு சென்றனர். ஆனால் அவர்கள் வருவதற்கு முன்பு சசிகுமார் மற்றும் மகாலெட்சுமி தற்கொலை செய்தகொள்ள முடிவு செய்தனர். அதன்படி விஷ மருந்தை மகாலெட்சுமி மட்டும் குடித்துள்ளார். ஆனால் சசிகுமார்

அதனை குடிக்காமல் வெளியே வீசினார். மயங்கிய நிலையில் இருந்த மகாலெட்சுமியை அங்கேயே விட்டு விட்டு தப்பி ஓடி விட்டார். நீண்ட நேரமாக அறை கதவு திறக்காததால் சந்தேகமடைந்த விடுதி ஊழியர்கள் கொடைக்கானல் போலீசில் புகார் அளித்தனர். அவர்கள் விரைந்து வந்து பார்த்தபோது மகாலெட்சுமி பிணமாக கிடந்தார். அவரது உடலை கைப்பற்றி கொடைக்கானல் அரசு ஆஸ்பத்திரிக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். மேலும் இது தொடர்பாக வழக்கு பதிவு செய்து தப்பி ஓடிய கள்ளக்காதலன் சசிகுமாரை தேடி வருகின்றனர்.

# தைவான் நாட்டு பெண்ணை கரம்பிடித்த கோவை என்ஜினீயர்



கவுண்டம்பாளையம், டிச.10

கோவை பெரியநாயக்கன்பாளையம் அடுத்த சாமிசெட்டிபாளையத்தை சேர்ந்த ஓய்வுபெற்ற வேளாண் அதிகாரி சுப்பிரமணியம்விஜயலட்சுமி தம்பதியின் மகன் கே.எஸ்.வைஷ்ணவ்ராஜ். சுற்றுசூழல் பாதுகாப்பு பொறியாளர்.

இவர்தைவான்நாட்டில் எம்.எஸ். படித்து அங்கு வேலை பார்த்து வந்தார். அப்போது அந்நாட்டை சேர்ந்த ஜிம்மிசாங்மிக்கிவாங் தம்பதியர் மகளும் ஆசிரியையுமான கிளாடியா சாங் என்பவருடன் ஒருங்கிணைந்து சமூகசேவை பணியில் ஈடுபட்டார். அப்போது அவர்களுக்கு இடையே நட்பு ஏற்பட்டு நாளடைவில் காதலாக மலர்ந்தது. தொடர்ந்து அவர்கள் குடும்பத்தினரிடம் காதலை தெரிவிக்க, இருதரப்பு பெற்றோருடன் திருமணத்துக்கு ஒப்புக் கொண்டனர். பின்னர் பெண் வீட்டார் கோவைக்கு புறப்பட்டு வந்தனர். தொடர்ந்து வெளிநாட்டு பெண்ணை திருமணம் செய்வதற்கான சட்டரீதியான நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. பின்னர் சாமிசெட்டிபாளையம் பகுதியில் காதலர்களுக்கு சில நாட்களுக்கு முன்பு திருமண நாள் குறிக்கப்பட்டது. தொடர்ந்து மங்கலவாத்தியங்கள் முழங்க மணமகன் தாலிக்கயிற்றை மணமகள் கழுத்தில் அணிவித்தார். பின்னர் மேட்டுப்பாளையம் ரோடு லட்சுமி திருமண மண்டபத்தில் திருமண வரவேற்பு நடைபெற்றது.

இதில் தைவான் நாட்டில் இருந்து பெண்ணின் உறவினர்கள், நண்பர்கள் உள்பட 50க்கும் மேற்பட்டோர் வந்திருந்து மணமக்களுக்கு வாழ்த்து தெரிவித்தனர். பின்னர் தமிழர் முறைப்படி விருந்து பரிமாறப்பட்டது. இதுகுறித்து மணமக்கள் கூறுகையில், சமூக சேவை பணியில் ஈடுபட்டபோது எங்களுக்கு இடையே நட்பு ஏற்பட்டு காதலித்து வந்தோம்.

தொடர்ந்து எங்களுக்கு தமிழ் முறைப்படி திருமணம் நடைபெற்றதாக மகிழ்ச்சியுடன் தெரிவித்து உள்ளனர்.

# அம்மாபேட்டை அருகே தனியார் நிறுவன ஊழியர் மயங்கி விழுந்து சாவு: உறவினர்கள் தர்ணா



அம்மாப்பேட்டை. டிச.10

ஈரோடு மாவட்டம் அம்மாபேட்டை அருகே உள்ள பட்லூர் பாரதிநகரை சேர்ந்தவர் பொன்னுச்சாமி. இவரது மகன் சரவண க்குமார் (வயது 29). இவர் பூனாச்சியில் செயல்பட்டு வரும் ஒரு தனியார் மில்லில் கடந்த 7 ஆண்டுகளாக மிஷின் ஆபரேட்டராகவேலைபார்த்து வந்தார். நேற்று காலை 6 மணிக்கு வழக்கம்போல சரவணகுமார் வேலைக்கு சென்றுள்ளார். மில்லில் வேலை பார்த்துக் கொண்டிருந்தபோது, நெஞ்சு வலிப்பதாக சகப் பணியாளர்களிடம் கூறிய சரவணக்குமார் மயங்கி கீழே விழுந்துள்ளார். உடனே அங்கிருந்தவர்கள் அவரை மீட்டு பூனாச்சியில் உள்ள ஒரு தனியார் மருத்து வமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றுள்ளனர். அங்கு முதலுதவி சிகிச்சை பெற்று பின்னர் மேல் சிகிச்சைக்காக அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த போது சரவணக்குமார் வரும் வழியிலேயே இறந்து விட்டதாக மருத்துவர் தெரிவித்துள்ளார். இதையடுத்து, சரவணகுமாரின் பெற்றோருக்கு தனியார் நிறுவனம் சார்பில் தகவல் தெரிவிக்கப்பட்டது. மேலும் இதுகுறித்து அம்மாபேட்டை காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற போலீசார் சரவணக்குமாரின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக பெருந்துறை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் சரவணகுமாரின் பெற்றோர் கொடுத்த புகாரின் பேரில் வழக்குப் பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இதற்கிடையே நேற்று மதியம் பூனாச்சி பகுதியில் செயல்பட்டு வரும் தனியார் மில் முன்பு உயிரிழந்த சரவணகுமாரின் பெற்றோர் மற்றும் உறவினர்கள், சுமார் 100க்கும் மேற்பட்டோர் திரண்டு நிறுவனத்தை முற்றுகையிட முயன்றனர். தொடர்ந்து அவர்கள் நிறுவனத்தின் நுழைவுவாயில் முன்பு அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். தகவல் அறிந்து வந்த அந்தியூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் செந்தில் குமார் (பொ) தலைமையிலான போலீசார் சரவணகுமாரின் உறவினர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். சுமார் 2 மணி நேரத்திற்கு மேலாக நடைபெற்ற போராட்டம் போலீசாரின் பேச்சுவார்த்தைக்கு பின்னர் கைவிடப்பட்டது. மேலும் அசம்பாவிதம் ஏதும் நடைபெறாமல் இருக்க பவானி உட்கோட்ட காவல்துறை துணை கண்காணிப்பாளர் சந்திரசேகரன் தலைமையில் 30க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# எழும்பூர் ரெயில் நிலையம் மறுவடிவமைப்பு பார்சல் அலுவலகம் இடித்து அகற்றம்



சென்னை, டிச.10

சென்னை எழும்பூர் ரெயில் நிலையம் ரூ.734.91 கோடி செலவில் மறுவடிமைப்பு செய்யப்படுகிறது. இதற்கு வடக்கு முகப்பு பகுதியில் இருந்த கட்டிடங்கள் இடிக்கப்பட்டது. அதே போல் பூந்தமல்லி சாலையில் இருந்த ரெயில்வே குடியிருப்புகளும் இதர அலுவலகங்களும் இடிக்கப்பட்டன.

இந்த பகுதியில் புதிய கட்டுமான பணிகள் விரைவில் தொடங்கவுள்ளன. கட்டுமான பணிகள் நடக்கும்போது பூந்தமல்லி சாலை வழியாக ரெயில் நிலையத்துக்கு செல்லும் பயணிகள் வசதிக்காக புதிய ரேம்ப் நடை மேம்பாலம் கட்டப்பட்டுள்ளது. பயணிகள்பூந்தமல்லி சாலையில் இருந்து வேனல்ஸ் ரோடு வழியாக சென்று வலது புறமாக திரும்பி நடை மேம்பாலம் வழியாக ரெயில் நிலையத்துக்கு செல்லலாம்.

இந்த திட்டத்துக்காக காந்தி இர்வின்சாலை அருகே இருந்த பார்சல் அலுவலகம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. அந்த அலுவலகம் முற்றிலுமாக மாற்றப்பட்டு கட்டிடம் இடிக்கப்பட்டுள்ளது.

பார்சல் அலுவலகம் தற்காலிகமாக முதலாவது நடைமேடையில் செயல்படுகிறது. இதையடுத்து அடித்தளங்கள் அமைக்கும் பணி தொடங்கி உள்ளது. பூந்தமல்லி நெடுஞ்சாலை அருகில் பன்னடுக்கு வாகன நிறுத்துமிடம், பார்சல் அலுவலகம் அமைக்கும் பணி நடக்கிறது. இதுவரை 3 தளங்கள்அமைக்கப்பட்டு உள்ளன. புதிய பார்சல் அலுவலகம் இன்னும் 6 மாதத்தில் கட்டி முடிக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

# மனநலம் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு பாலியல் வன்கொடுமை: சென்னை காவல்துறை விளக்கம்

சென்னை, டிச.10

சென்னை அயனாவரத்தில் மனநலம் பாதிக்கப்பட்ட கல்லூரி மாணவி ஒருவரை ஒரு வருடத்திற்கும் மேலாக பத்துக்கும் மேற்பட்ட நபர்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கியதாக எழுந்த குற்றச்சாட்டு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக பாதிப்புக்குள்ளான மாணவியின் தந்தை அளித்த புகாரின் அடிப்படையில் குற்றவாளிகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், மீதம் உள்ள குற்றவாளிகளை கண்டறிய போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக சென்னை காவல்துறை தரப்பில் அளிக்கப்பட்டுள்ள விளக்கத்தில், "மனநலம் பாதிக்கப்பட்ட பெண் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கு தொடர்பாக 4 சிறப்பு படைகள் அமைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில், வழக்கு விசாரணையை விமர்சிக்க வேண்டாம்.

பொதுவெளியில் விமர்சனங்களை முன்வைப்பது சாட்சியங்களை கலைத்து புலன் விசாரணைக்கு இடையூறு ஏற்படுத்தும். அதோடு பாதிக்கப்பட்ட பெண்ணிற்கும், அவரது குடும்பத்திற்கும் மன உளைச்சலை ஏற்படுத்தும். எனவே விசாரணையை விமர்சிக்க வேண்டாம் என காவல் துறை சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 6 நாட்களாக கடலில் தத்தளிக்கும் மாடு: மீட்க முடியாமல் மீனவர்கள் தவிப்பு


கடலூர், டிச.10

பெஞ்சல் புயல் கடந்த 30ம்தேதி இரவு தமிழக கரையை கடந்தது. அப்போது பெய்த அதிகன மழையால் விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி உள்ளிட்ட வடமாவட்டங்கள் கடும் பாதிப்புகளை சந்தித்துள்ளன.

அப்போது தென்பெண்ணை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக, கடலூர் தாழங்குடி முகத்துவாரத்தில் மேய்ந்துகொண்டிருந்த 35க்கும் மேற்பட்ட எருமை மாடுகள் கடலுக்குள் அடித்துச் செல்லப்பட்டன. இதில் பல மாடுகள் உயிரிழந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில் தாழங்குடா பகுதியில் இருந்து 9 நாட்டிகல் மைல் தூரத்தில் மாடு ஒன்று உயிருக்கு போராடி வருவதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடலில் மாடு தத்தளிப்பதைக் கண்டு, அதற்கு குடிக்க தண்ணீர் வழங்கி உள்ளனர். ஆனால் பெரிய படகு இல்லாததால் மாட்டை காப்பாற்ற முடியாமல் மீனவர்கள் தவித்து வருவதாகவும், கடந்த 6 நாட்களாக அந்த மாடு தத்தளித்து வருவதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளது.

# பிபின்ராவத் 3ம் ஆண்டு நினைவு தினம்: ராணுவ அதிகாரிகள் அஞ்சலி



ஸ்ரீபெரும்புதூர், டிச.10

பீகார் மாநிலத்தை சேர்ந்தவர் முகேஷ் தாஸ். இவர் காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் அடுத்த பால்நல்லூர் பகுதியில் உள்ள புதியதாக கட்டி வரும் கட்டிடத்தில் வேலை செய்து வருகிறார். கட்டிடம் கட்டும் இடத்திற்கு அருகில் தன் குடும்பத்துடன் தங்கி முகேஷ் தாஸ் வேலை செய்து வந்தார். அவினேக் குமார் வயது 6, என்கிற மகனும், அனுகுமாரி வயது 2 என்கிற மகளும், லலிதா குமாரி என்கிற மனைவியும் உள்ளனர். நேற்று மாலை சிறுவன் அவினேக் குமாரை காணவில்லை என அவரது பெற்றோர்கள் தேடி உள்ளார். அப்போது முகேஷ் தாஸ் தங்கி உள்ள இடத்திற்கு அருகே அவர் வேலை செய்யும் புதிய கட்டுமான பணிக்கு தோண்டபட்ட பள்ளத்தில் தேங்கிய மழை நீரில் சிறுவன் மூழ்கி பேச்சு மூச்சு இல்லாமல் மிதந்து உள்ளார்.

அவரை மீட்டு மாத்துரில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு சிறுவனை பரிசோதனை செய்த டாக்டர் சிறுவன் இறந்து விட்டதாக தெரிவித்தனர். இது குறித்து தகவல் அறிந்த ஸ்ரீபெரும்புதூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் தர்மலிங்கம் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று சிறுவனின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு ஸ்ரீபெரும்புதூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்து வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

# புதிய கட்டிடத்தில் தண்ணீர் தேங்கிய பள்ளத்தில் தவறி விழுந்த சிறுவன் உயிரிழப்பு



சென்னை, டிச.10

டாஸ்மாக் மதுக்கடைகள் தற்போது கணினி மயமாக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் சென்னை புறநகர் பகுதிகளான காஞ்சிபுரம் (வடக்கு), காஞ்சிபுரம் (தெற்கு) அரக்கோணம், ராமநாதபுரம், கரூர், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் உள்ள டாஸ்மாக் கடைகள் கணினி மயமாக்கப்பட்டு உள்ளதால் மது வாங்குபவர்களுக்கு ரசீது வழங்கப்பட்டு வருகிறது. இதில் கடை விற்பனையாளர்கள் உரிய வழிமுறைகளைபின்பற்றாமல் தவறான செயல்பாடுகளில் ஈடுபடுவதாக டாஸ்மாக் நிர்வாகத்துக்கு புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. இது குறித்து மாவட்ட மேலாளர்களுக்கு டாஸ்மாக் மேலாண்மை இயக்குனர் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது: மதுபான சில்லரை விற்பனை கடைகளில் விற்பனையின் போது, நுகர்வோர் விரும்பி கேட்கும் மதுபானங்களுக்கு அதற்கான ரசீதுகள் கண்டிப்பாக வழங்கப்பட வேண்டும். மதுபான சில்லரை விற்பனை கடைகளில் நுகர்வோர்களுக்கு மதுபானங்களை விற்பனை செய்யும் போது மட்டுமே பாட்டிலைஸ்கேன்செய்து விற்க வேண்டும். மதுபானங்களை முன்கூட்டியே ஸ்கேன் செய்து வைத்துக் கொண்டு விற்பனை செய்யக் கூடாது.

இதனால் விற்பனைக்கும் இருப்புக்கும் வித்தியாசம் ஏற்படுகிறது. இதை கடைக்காரர்கள் சரி செய்ய வேண்டும். தவறான செயல்பாடுகளை கண்காணிக்க தவறும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட மாவட்ட மேலாளர் மற்றும் உதவி மேலாளர் முழு பொறுப்பாவதோடு, துறை ரீதியான உரிய விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப் படும். எனவே ஒவ்வொரு டாஸ்மாக் கடைகளிலும் வாடிக்கையாளர் வாங்கும் சரக்குக்கு அவர் முன்னிலையில் ஸ்கேன் செய்து ரசீது வழங்க வேண்டும். இதை செயல்படுத்திட ஆக்கப்பூர்வமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# நடத்தையில் சந்தேகம்: கள்ளக்காதலியை கத்தியால் குத்தி கொன்ற தொழிலாளி... அடுத்து நடந்த விபரீதம்



விழுப்புரம், டிச.10

திருவண்ணாமலை மாவட்டம் வேட்டவலத்தை சேர்ந்தவர் ஸ்ரீதர். இவரது மனைவி சத்யா. காதல் திருமணம் செய்து கொண்ட இவர்களுக்கு ஒரு மகனும், மகளும் உள்ளனர். இந்த நிலையில் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு ஸ்ரீதர் இறந்து விட்டார். இதையடுத்து சத்யா தனது குழந்தைகளுடன் விழுப்புரம் அடுத்த அரகண்டநல்லூர் அருகே உள்ள மணம்பூண்டியில் வசித்து வந்தார்.

இந்த நிலையில் வீட்டு வேலை செய்து வந்த சத்யாவுக்கும், கள்ளக்குறிச்சி மாவட்டம் திருப்பாலப்பந்தலை சேர்ந்த கூலித்தொழிலாளி முருகன் என்பவருக்கும் கள்ளக்காதல் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதையடுத்து இருவரும் தனிமையில் சந்தித்து கள்ளக்காதலை தொடர்ந்து வந்தனர்.

அப்போது சத்யாவின் நடத்தை மீது முருகனுக்கு சந்தேகம் ஏற்பட்டதாக தெரிகிறது. இதில் கோபமடைந்த முருகன் சத்யாவை கத்தியால் சரமாரியாக குத்தி கொலை செய்தார். தொடர்ந்து அவர் காரில் அங்கிருந்து தப்பிச்சென்றார். திருக்கோவிலூர் திருவண்ணாமலை சாலையில் உள்ள அரசு போக்குவரத்து கழக பணிமனை முன்பு காரில் சென்றபோது, அவரது கட்டுப்பாட்டை இழந்த கார் திடீரென சாலையோரம் இருந்த மின்கம்பத்தின் மீது மோதி நின்றது.

இதில் காயமடைந்த முருகனை அக்கம் பக்கத்தினர் மீட்க முயன்றனர். அப்போது அவர் திடீரென தான் வைத்திருந்த கத்தியால் தன்னை தானே குத்திக்கொண்டார். இது குறித்த தகவலின் பேரில் அரகண்டநல்லூர்போலீஸ் இன்ஸ்பெக்டர் சாகுல்அமீது தலைமையிலான போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று முருகனை மீட்டு சிகிச்சைக்காக திருக்கோவிலூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர்.

அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் மேல் சிகிச்சைக்காக திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி முருகன் பரிதாபமாக இறந்தார். இது குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# தயாரிப்பாளர் ஜகதீஸ் அளவுக்கு யாரும் இதுவரை ஒத்துழைப்பு தந்ததில்லை ஷேன் நிகாம்



SR PRODUCTIONS சார்பில் B.ஜகதீஸ் தயாரிப்பில், ரங்கோலி பட இயக்குநர் வாலி மோகன் தாஸ் இயக்கத்தில், மலையாள நடிகர் ஷேன் நிகாம், கலையரசன், நிஹாரிகா நடிப்பில், புதுமையான ஆக்சன் டிராமாவாக உருவாகியுள்ள திரைப்படம் "மெட்ராஸ்காரன்". விரைவில் திரைக்கு வரவுள்ள இப்படத்தின் இரண்டாவது சிங்கிள் "காதல் சடுகுடு" பாடல் வெளியீட்டு விழா, தனியார் மாலில், மக்கள் முன்னிலையில் படக்குழுவினருடன் திரைப்பிரபலங்கள் கலந்து கொள்ள, சிறப்பாக நடைபெற்றது.

ஆடல், பாடல், நடனம் மற்றும் மேஜிக் ஷோ என மக்கள் முன்னிலையில் கோலாகலமாக நடைபெற்ற இந்நிகழ்வினில்...

நடிகர் கலையரசன் பேசியதாவது...

இங்குள்ள ரசிகர்கள் அனைவருக்கும் நன்றி. நாம் எல்லாப் படத்திலும் உண்மையாக அர்ப்பணிப்போடு உழைப்போம், ரசிகர்கள் தரும் ஆதரவு தான் நாம் நடிகர்களாக வெற்றி பெறுகிறோம். தயாரிப்பாளர் ஜகதீஸ் நல்ல மனசுக்காரர், அவருக்காக இந்தப்படம் ஜெயிக்க வேண்டும். ஷேன் டார்லிங், நிஹாரிகா சூப்பராக நடித்துள்ளனர். ஐஸு இந்தப்படத்தில் வித்தியாசமான ரோல் செய்துள்ளார். டைரக்டர் வாலிக்கு நன்றி. இந்தப்படத்தில் எல்லோரும் சின்சியராக உழைத்துள்ளனர். கண்டிப்பாக உங்கள் அனைவருக்கும் இப்படம் பிடிக்கும் நன்றி.

நடிகர் ஷேன் நிகாம் பேசியதாவது...

தயாரிப்பாளர் ஜகதீஸுக்கு நன்றி. மலையாளத்தில் நிறையத் தயாரிப்பாளர்களுடன் வேலை பார்த்துள்ளேன். ஆனால் யாரும் இவர் அளவு ஒத்துழைப்பு தந்ததில்லை நன்றி. சதீஷ் , என்னை ஆட வைத்ததற்கு நன்றி. நிஹாரிகா நல்ல ஒத்துழைப்பு தந்தார். வாலி மோகன் தாஸ் இந்தப்படம் தந்ததற்கு நன்றி. தமிழ்ப் படங்களின் ரசிகன் நான், என் முதல் தமிழ்ப்படம் இது, கண்டிப்பாக உங்கள் அனைவருக்கும் இந்தப்படம் பிடிக்கும் நன்றி.

ஷேன் நிகாம் தயாரிப்பாளரிடம் இவ்வளவு நெருக்கமாக ஒரு ஆக்டர் இருப்பாரா எனத் தெரியவில்லை, நான் எப்போது கொஞ்சம் சோகமாக இருந்தாலும் உடனே உற்சாகப்படுத்துவார். இந்தப்படம் வந்த பிறகு தமிழில் மிக முக்கியமான நடிகராக இருப்பார். பல தடைகளைக் கடந்து தான் தயாரிப்பாளர் ஆகியிருக்கிறேன். இதே மவுண்ட் ரோட்டில் டீ வித்திருக்கிறேன். இப்போது தயாரிப்பாளராக மாறியுள்ளேன். கண்டிப்பாக இந்தப்படம் உங்கள் அனைவருக்கும் பிடிக்கும் நன்றி.

ஒரு சிறு ஈகோ, ஒருவனின் வாழ்வை எந்த எல்லைக்கு கூட்டிச்செல்லும் என்பதே இப்படத்தின் மையம். ரங்கோலி படம் மூலம், பள்ளிச் சிறுவர்களின் வாழ்வியலை வண்ணங்களாக தீட்டிய, இயக்குநர் வாலி மோகன் தாஸ், இப்படத்தில் ஒரு சிறு சம்பவம் பெரும் பிரச்சனையாக, இருவர் வாழ்க்கையை புரட்டி எடுப்பதை, பரபரப்பான திரைக்கதையாக படைத்துள்ளார். இப்படத்திற்கு முன்னணி இசையமைப்பாளர் சாம் CS இசையமைக்கிறார்.

# வருண் தவான் கீர்த்தி சுரேஷ் நடித்த பேபி ஜான் படத்தின் டிரெய்லர் நாளை வெளியீடு




இயக்குநர் ஏ. காளீஸ் இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படம் 'பேபி ஜான்'. தமிழில் வெளியான 'தெறி' திரைப்படத்தின் ரீமேக்கான இப்படத்தில் நடிகர் வருண் தவான் கதையின் நாயகனாக நடித்துள்ளார். இவருடன் கீர்த்தி சுரேஷ், வாமிகா கபி, ஜாக்கி ஷெராப், ராஜ்பால் யாதவ், மணிகண்டன், பி. எஸ். அவினாஷ் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

கிரண் கவுஷிக் ஒளிப்பதிவு செய்த இந்த திரைப்படத்திற்கு எஸ். தமன் இசையமைத்துள்ளார். ஆக்ஷன் எண்டர்டெய்னராக தயாராகியுள்ள இந்தத் திரைப்படத்தை ஜியோ ஸ்டுடியோஸ், சினி ஒன் ஸ்டுடியோஸ் மற்றும் இயக்குநர் அட்லியின் தயாரிப்பு நிறுவனமான ஏ ஃபார் ஆப்பிள் ஆகிய நிறுவனங்கள் தயாரித்துள்ளது.

இந்தப் படம் கிறிஸ்துமஸ் பண்டிகையை ஒட்டி டிசம்பர் 25 ஆம் தேதி வெளியாகவுள்ளது. இந்தப் படத்தின் டீசர் ஏற்கனவே வெளியாகி பெரும் வரவேற்பை பெற்றது. பேபி ஜான் படத்தின் 'நைன் மடாக்கா' மற்றும் பிக்லி பாம் பாடல் வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது.

படத்தின் டிரெய்லர் நாளை வெளியாகவுள்ளது. இதை குறித்து படக்குழு புது போஸ்டர் ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

# கவுகாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன்: சாம்பியன் பட்டம் வென்றார் இந்திய வீரர் சதீஷ்குமார்




கவுகாத்தியில் மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி கவுகாத்தியில் நடைபெற்றது. இதில் சர்வதேச நாடுகளைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர்.

இந்நிலையில், இன்று நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில் இந்தியாவின் சதீஷ்குமார் கருணாகரன், சீனாவின் ஜூ ஜுவான் உடன் மோதினார்.

இந்தப் போட்டியில் சதீஷ்குமார் 2117, 2114 என்ற புள்ளிக்கணக்கில் வென்று சாம்பியன் பட்டம் வென்றார். இந்தப் போட்டி 44 நிமிடங்களில் முடிவுக்கு வந்தது.

கடந்த ஆண்டு நடந்த ஒடிசா மாஸ்டர்ஸ் சூப்பர் 100 போட்டியில் சதீஷ்குமார் பட்டம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# புரோ கபடி லீக்: பாட்னா, குஜராத் அணிகள் வெற்றி



11வது புரோ கபடி லீக் தொடர் கடந்த அக்டோபர் 18ம் தேதி ஐதராபாத்தில் தொடங்கியது. இந்த தொடரின் இரண்டாம் கட்ட லீக் ஆட்டங்கள் உத்தர பிரதேசத்தின் நொய்டாவில் நடைபெற்றது.

புரோ கபடி லீக்கின் மூன்றாம் கட்ட லீக் ஆட்டங்கள் மகாராஷ்டிராவின் புனே நகரில் நடந்து வருகிறது.

இந்நிலையில், இன்று இரவு 8 மணிக்கு நடந்த முதல் போட்டியில் பாட்னா பைரேட்ஸ், ஜெய்ப்பூர் பிங்க் பாந்தர்ஸ் அணிகள் மோதின.

இதில், பாட்னா அணி 3828 என்ற புள்ளிக்கணக்கில் ஜெய்ப்பூர் அணியை வீழ்த்தி 10வது வெற்றியைப் பதிவு செய்தது.

மற்றொரு போட்டியில் குஜராத் ஜெயண்ட்ஸ் அணி 34, 33 என்ற புள்ளிக்கணக்கில் யு மும்பா அணியை வீழ்த்தி திரில் வெற்றி பெற்றது.

# 2வது டெஸ்டில் வெற்றி: உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலில் ஆஸ்திரேலியா முன்னேற்றம்




இந்தியா, ஆஸ்திரேலியா அணிகள் இடையிலான 2வது டெஸ்ட் பகலிரவு போட்டியாக அடிலெய்டில் நடைபெற்றது. டேஸ் வென்று முதலில் பேட் செய்த இந்தியா முதல் இன்னிங்சில் 180 ரன்களில் ஆல் அவுட்டானது.

தொடர்ந்து முதல் இன்னிங்சை தொடங்கிய ஆஸ்திரேலியா 337 ரன்களில் ஆல் அவுட்டானது. டிராவிஸ் ஹெட் 140 ரன்கள் அடித்தார்.

இந்தியா சார்பில் ஜஸ்பிரித் பும்ரா, முகமது சிராஜ் தலா 4 விக்கெட் வீழ்த்தினர்.

157 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2வது இன்னிங்சை ஆடிய இந்திய அணி 2வது இன்னிங்சில் 175 ரன்களில் ஆல் அவுட்டானது.

ஆஸ்திரேலியா சார்பில் கம்மின்ஸ் 5 விக்கெட்டுகள் கைப்பற்றி அசத்தினார்.

அடுத்து ஆடிய ஆஸ்திரேலியா விக்கெட் இழப்பின்றி 19 ரன்கள் அடித்து 10 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் 11 என்ற கணக்கில் சமனில் உள்ளது.

இந்நிலையில், உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலில் ஆஸ்திரேலியா அணி முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது. 60.71 புள்ளிகளுடன் ஆஸ்திரேலியா முதலிடத்தில் உள்ளது. தோல்வி அடைந்த இந்திய அணி 57.29 புள்ளிகளுடன் இந்திய அணி 3வது இடத்தில் உள்ளது. 59.26 புள்ளிகளுடன் தென் ஆப்பிரிக்கா 2வது இடத்தில் உள்ளது. இலங்கை அணி 50.00 புள்ளிகளுடன் 4வது இடத்தில் உள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.